**தேதி :** 18.09.2025 **SC.No. :** 373/2023 PW :1 மாரியப்பன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஏற்கனவே எனக்கும், எதிரிக்கும் முன்விரோதம் சம்பந்தமாக காவல்நிலையத்தில் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இலஞ்சி ஜங்சனில் ரோட்டிற்கு மேல்புறமும், கீழ்புறமும் புரோட்டா கடை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் சைவ ேஹாட்டல் இல்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் வாஞ்சிநாதன் மணிமண்டபம் இல்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் ஆட்டோ ஸ்டாண்ட், கார் ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். நான் போக்கு ஆட்டோவில் மருத்துவமனை சென்றேன். ஆட்டோ டிரைவர் பெயர் எனக்கு தெரியாது.

நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது, எப்போது என் மனைவியும், சகோதரர்களும் வந்தார்கள் என்றால் மறுநாள் வந்தார்கள். சம்பவநாள் என்னுடைய அக்காவும், அக்கா மகன்களும் மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் மருத்துவமனை செல்லும்போது மயக்கநிலையில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு மயக்கம் மறுநாள் காலை 10.00 மணிக்கு தெளிந்தது என்றால் சரிதான். அதற்கு பின்னர் தான் போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றால் முதல் நாளே நான் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். சம்பவநாள் ஏட்டையா வந்து வாக்குமூலம் வாங்கினார் என்றால் சரிதான். ஏட்டையாவுக்கும், எஸ்.ஐக்கும் உள்ள வேறுபாடு எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் ஒரு ரேகை போட்டு கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் எனக்கு படித்து காண்பித்தார்கள். போலீசார்

என்னை விசாரிக்கும் போது என்னுடைய சகோதரி உடன் இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய சகோதரியை விசாரித்து எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

புகார் வாக்குமூலத்திலும், விசாரணையிலும் கத்தியின் அடையாளம் பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ஏசியதினால் எனக்கு அவமானம் ஏற்பட்டதாகவும், உயிர் பயம் ஏற்பட்டதாகவும் புகார் வாக்குமூலத்திலும், விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள திருத்தங்கள் எப்போது, யாரால் செய்யப்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொல்லச் சொல்லத் தான் புகார் வாக்குமூலம் எழுதினார்கள். மதுரை ரோட்டில் இலஞ்சிக்கு வடபுறம் இருட்டாக இருக்கும் என்றால் சிறிது தூரம் தாண்டி இருட்டாக இருக்கும். அந்த இடத்தில் மது குடிப்பவர்கள் மது குடித்து விட்டு பாட்டிலை உடைத்து போட்டிருப்பார்கள் என்றால் சரிதான்.

அந்த இடத்தில் வெளியூர்க்காரர்கள் காரை நிறுத்துவது வழக்கம் என்றால் சரிதான். நான் வெளியூர்க்காரர்கள் யாரிடமோ வாக்குவாதம் செய்தபோது அவர்களால் தாக்கப்பட்டு கீழே கிடந்த பாட்டிலின் மீது விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மீது இருந்த பகையின் காரணமாக நான் எதிரி மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி சொல்லி அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக சந்தேகப்பட்டு, எதிரி மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

எதிரியின் அப்பா இறந்து 10 வருடம் இருக்கும் என்றால் சரிதான். எதிரி நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் நான் குடிவருவதற்கு முன்பே குடியிருந்து வந்தார். எதிரியின் சகோதரருக்கு திருமணம் நடந்த பிறகு எதிரியும், அவருடைய தாயாரும் அவருடைய வீட்டில்

குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எதிரி இல்லாத நேரத்தில் எதிரியின் தாயாரிடம் நான் தவறாக செயல்பட்டேன் என்றாலும், அந்த விபரம் தெரிந்து எதிரி என்னிடம் கேட்டபோது, அவரை நான் தாக்கி விட்டு அதனை மறைக்க வேண்டி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி அந்த விபரத்தை என் வீட்டிலும், என் சமுதாயத்திலும் சொல்லி விடுவார் என்ற அச்சத்தில் நான் இவ்வாறு ஒரு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் எந்த சம்பந்தமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.20 16:19:17 +0530